# தலைமை ஆசிரியர் உரை

கொழும்புப் பல்கலைக்கழக கலைப்பீடம் வெளியிடும் இக் கொழும்புத் தமிழ் இணைய ஆய்விதழானது சமூக விஞ்ஞானத் துறைகளில் பல விடயங்களை இணைத்து உயர் தரமான ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியதாகத் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படுகின்றது.

இவ்வாய்விதழானது சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியற் கற்கைப் பிரிவுகளில் பல் துறைகள் சார்ந்த ஆய்வுகளை வரவேற்பதன் காரணமாக இலங்கையின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் ஆய்வுக் கட்டுரைகள் சேகரிக்கப்பட்டு தரம் வாய்ந்தவை இவ்வாய்விதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அதே வேளை இவ்வாய்விதழானது இணைய இதழாகக் காணப்படுவதனால் அனைவராலும் இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடியதாகக் காணப்படுகின்றது.

அத்துடன் சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானிடவியற் கற்கைகள் துறையின் தமிழ் மொழி மூல ஆய்வுகளை ஊக்குவிப்பதனையும் மேம்படுத்துவதையும் பிரதான நோக்கமாகக் கொண்டே இவ் இணைய ஆய்விதழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆய்வுக் கட்டுரைகளும் இரண்டு மீளாய்வாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரே பிரசுரிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே தரமான ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழ் மொழியில் பிரசுரிக்க விரும்பும் ஆய்வாளர்களுக்கு இவ்விதழானது சிறந்த களமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கொழும்புத் தமிழ் இணைய ஆய்விதழின் தலைமை ஆசிரியர் என்றவகையில் இத்தகைய மேம்பாடுடைய நடவடிக்கைக்கு உதவிக்கரம் வழங்கிய கொழும்புப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி சிரேஸ்ட பேராசிரியர் லசந்த மானவடு அவர்களுக்கு எனது மனமுவர்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இவ்வாய்விதழை வெற்றிகரமாக வெளியிடுவதற்கு ஆலோசனைகளை தந்துதவிய ஆலோசகர்க் குழாத்திற்கும் இவ்விதழ் வெளிவருவதற்கு பல வழிகளிலும் உதவிகளை வழங்கிய ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்கள் குழாத்திற்கும், அத்துடன் சிரமம் பாராது கட்டுரைகளை மீளாய்வுச் செய்த மீளாய்வாளர்களுக்கும் எனது சினேகபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி!

**போராசிரியர் பரீனா ருசைக்**

தலைமை ஆசிரியர்

புவியியற் துறை

2023 டிசெம்பர்